DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 236 /2024**

**Deposition of LW2 examined as PW2** Dt. 06.05.2025

| | |
|---|---|
| Name | ஷீலா |
| Father's/Husband's Name | கல்யாணசுந்தரம் |
| Village | டி. மணல்மேடு |
| Taluk | |
| Age | 34/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 06.05.2025

(Accused present)

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து சுவீட்கடையில் கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரியுடன் கடந்த 2009 ஆம் ஆண்டு கல்யாணம் நடந்தது. திருமணம் முடிந்ததில் இருந்து தினமும் குடித்துவிட்டு வந்து என்னிடம் தகராறு செய்வது வழக்கம். கையில் எது கிடைத்தாலும் கழி, கட்டை, பெல்ட் என்று பார்க்காமல் அதை வைத்து என்னை அடிப்பார். 13 வருட காலமாக ஆஜர் எதிரி என்னை அடித்த கொடுமைபடுத்தும் போதெல்லாம் எனது தகப்பனார் வீட்டிற்கு வந்து தங்குவேன். அவர் என்னை சமாதானபடுத்தி என்னை கணவர் வீட்டிற்கு அனுப்பி வைப்பார். கடந்த 4.09.2023 ம் தேதி இரவு 8.30 மணியளவில் எனது பக்கத்து தெருவில் நடந்த திருமண நிகழ்ச்சி சென்று விட்டு வந்த போது குடித்து விட்டு வந்து எனது கணவர் தெருவில் நின்றுகொண்டு என்னை குச்சிக்காரி தேவிடியா மகளே என்று திட்டினார். தெருவில் நின்று பேச வேண்டாம் உள்ளே வா கூப்பிட்டதற்கு கட்டையை எடுத்து என்னை தாக்கினார். தடுக்க முற்பட்ட போது இடது உள்ளங்கையில் கிழிந்த காயம் ஏற்பட்டது. அதே கட்டையால் முன் மண்டையிலும், பின் மண்டையிலும் தாக்கினார். வலது கையில் அடித்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டது. வயிற்று பகுதியிலும் தாக்கினார். எதிரி தாக்கியதில் எனக்கு சுயநினைவு இல்லை. நான் 3 நாட்கள் கழித்து கண்முழித்து பார்த்த போது மருத்துவமனயில் இருந்தேன். முன்தலையில் 8 தையலும், பின்தலையில் 6 தையலும் இடது உள்ளங்கையில் 3,4 தையல் போடப்பட்டு இருந்தது. வலது கையில் அறுவை சிகிச்சை செய்து பிளேட் பொருத்தினார்கள். (கைகளில் உள்ள காயத்தின் தழும்புகளை இந்நீதிமன்றத்தில் சாட்சி காட்டினார்.) மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை

ஷீலா